ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 14,487 — 1965 අගෝස්තු 20 වැනි සිකුරාදා — 1965.8.20

14,487 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### ஹங்குருங்கெத்த ஏசால பெரஹர

#### அறிவித்தல்

1951 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ந் தேதிய 10,232 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஹங்குருங்கெத்த எசால பெரஹர சம்பந்தமான ஒழுங்கு விதிகளில் 1ம், 2ம் ஒழுங்கு விதிகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி உள்நாட்டு அமைச்சர் விஜயானந்த தகநாயக்கா ஆகிய நான் இந்த அறிவித்தல் மூலம் :—

(1) 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் தேதி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ந் தேதி வரைக்குமான காலத்தினை மேற்சொன்ன ஒழுங்கு விதிகள் 1965 ல் நடைமுறையிலிருக்கும் காலமென முன் சொன்ன ஒழுங்கு விதிகளில் 1 ம் ஒழுங்கு விதியின் கீழ் நியமிக்கிறேன் ; அத்துடன்

(2) கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கும் பிரதேசம் இவ்வொழுங்கு விதிகளை 1965 ல் பிரயோகிப்பதற்கு ஒதுக்கப்பட்ட பிரதேசமாக விருக்குமென முன் சொன்ன ஒழுங்கு விதிகளில் 2 ம் ஒழுங்கு விதியின் கீழ் தீர்மானிக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் 17 ந் உ.

டபிள்யு. தகநாயக்கா,
உள்நாட்டு அமைச்சர்.

#### அட்டவணை

#### ஒதுக்கப்பட்ட பிரதேசம்

உடஹேவாகெத்த பகுதி டியதிலக கோறளை ஹங்குருங்கெத்த கிராம சேவகரின் பிரிவிலுள்ள ஹங்குருங்கெத்தவிலுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணியடங்கலும் :—

வடக்கு : பிலபிட்டியா கந்துரையிலிருந்து கண்டி இராகலை அரசாங்க கட்டடப் பகுதி றோட்டிற்குப் போகும் ஒற்றையடிப் பாதையும் கண்டி இராகலை அரசாங்க கட்டடப் பகுதி றோட்டும் திரு. ஆர். ஈ. எஸ். டி சொய்சாவின் காணியின் வடக்கு எல்லையும் ;

தெற்கு : பெற்றோல் நிரப்பு நிலையத்திலிருந்து இலங்கைப் புகையிலைக் கம்பெனி வளவுக்குப் போகும் ஒற்றையடிப் பாதையும் இலங்கைப் புகையிலைக் கம்பெனி வளவிலிருந்து பொறஹீனை றோட்டுக்குப் போகும் ஒற்றையடிப் பாதையும் ;

கிழக்கு : எலமல் வேவ கந்துர ;

மேற்கு : பெல்லிடை பொல்வத்தையின் கிழக்கு எல்லை, கும்புரஹெதரவத்தையின் கிழக்கு எல்லை, நாவன்னலிய கும்புரையின் கிழக்கு எல்லை, பிலப்பிட்டியாகும்புரையின் கிழக்கு எல்லை, வெவலியத்தகும்புரையின் கிழக்கு எல்லை, போடண்டறுவகும்புரையின் கிழக்கு எல்லை.

8–868

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.